(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 106.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2024 சனவரி 24 புதன்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ டிரான் அலஸ்,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** கைத்தொழில் அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர்

**கௌரவ நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி,** வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** அமைச்சரவை அங்கத்தவர் அல்லாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சர் மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலும் அமுனுகம,** முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) டயனா கமகே,** சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டி.வீ. சானக,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாமர சம்பத் தசநாயக,** ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ றோஹண திஸாநாயக்க,** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜகத் புஷ்பகுமார,** வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லொஹான் ரத்வத்தே,** பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நீர்ப்பாசனம் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ச. வியாழேந்திரன்,** வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ கபில அதுகோரல**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ வஜிர அபேவர்தன**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர**

**கௌரவ எம். உதயகுமார்**

**கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட**

**கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன**

**கௌரவ அகில எல்லாவல**

**கௌரவ லலித் எல்லாவல**

**கௌரவ கோவிந்தன் கருணாகரம்**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்**

**கௌரவ பைஸால் காசிம்**

**கௌரவ ஜயந்த கெட்டகொட**

**கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல**

**கௌரவ உதயன கிரிந்திகொட**

**கௌரவ லலித் வர்ண குமார**

**கௌரவ கெவிந்து குமாரதுங்க**

**கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி**

**கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு**

**கௌரவ நாலக பண்டார கோட்டேகொட**

**கௌரவ மனோ கணேசன்**

**கௌரவ உதய கம்மன்பில**

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ எச். நந்தசேன

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ நிபுண ரணவக

கௌரவ ரொசான் ரணசிங்க

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ சீ.பீ. ரத்நாயக்க

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ நயன வாசலதிலக

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

**கௌரவ க.வி. விக்னேஸ்வரன்**

**கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன**

**கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான**

**கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே**

**கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி**

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க**

**கௌரவ டீ. வீரசிங்க**

**கௌரவ வீரசுமன வீரசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர**

**கௌரவ திலிப் வெதஆரச்சி**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ ஜகத் சமரவிக்ரம**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ சட்டத்தரணி டப்ளியூ. டீ.ஜே. செனவிரத்ன**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ அப்துல் ஹலீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ ஜயரத்ன ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ ஏ.எச்.எம். பௌஸி**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சனாதிபதியின் செய்திகள்:** சனாதிபதியிடமிருந்து கிடைத்த பின்வரும் செய்தியைச் சபாநாயகர் வாசித்தார்:—

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
**President of Sri Lanka**

எனது இல: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/4/5/1

2024 சனவரி மாதம் 23 ஆந் திகதி

**மாண்புமிகு மஹிந்த யாப்பா அபேவர்த்தன அவர்கள்**
சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, மக்களிடையே அமைதியைப் பேணுவதற்கான தேவையைக் கருத்திற்கொண்டு, முதலாம் அட்டவணையில் குறித்துரைத்துக் காட்டப்படும் ஆயுதந்தாங்கிய படையின் சகல உறுப்பினர்களும் அதன் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைத்துக் காட்டப்பட்ட பிரதேசங்களில் மக்களிடையே அமைதியைப் பேணுவதற்காக அழைக்கப்படுகின்றனர் என ஆணையிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, மேற்படி கட்டளைச் சட்டத்தின் 21(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2(3) பிரிவுக்கமைய அதனை இத்தால் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கின்றேன்.

இங்ஙனம் - அன்புள்ள

**ரணில் விக்கிரமசிங்க**
சனாதிபதி

**2. சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

**I**

“அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் ‘நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை’ எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மேலும் ஐந்து மனுக்களின் பிரதிகள் எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன். “

**II**

“2024 சனவரி மாதம் 23 ஆம் திகதிய எனது அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஆறு மனுக்களுக்கு மேலதிகமாக, அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் ‘பயங்கரவாத எதிர்ப்பு’ எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மேலும் பதினெட்டு மனுக்களின் பிரதிகள் எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன். “

**III**

“இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம், 2024 சனவரி மாதம் 23 ஆம் திகதி ‘மோசடிகளைத் தடுத்தல் (திருத்தம்), “மத்தியஸ்த சபை (திருத்தம்)’, ‘அற்றோணித் தத்துவம் (திருத்தம்)’ மற்றும் ‘தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம்’ எனும் சட்டமூலங்களில் என்னால் சான்றுரை எழுதப்பட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.”

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) கல்வி அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்—

(i) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் VII ஆம் பகுதியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 யூன் 28 ஆம் திகதிய 2338/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்; மற்றும்

(ii) (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 21, 22, 23, 24 மற்றும் 24அ ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஒக்டோபர் 05 ஆம் திகதிய 2352/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான தேசிய அருங்கலைகள் பேரவையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்க கணக்குகள் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**4. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** (1) ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ சமல் ராஜபக்ஷ ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடருக்கான ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவின் இரண்டாவது அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் **அச்சிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) வங்கித்தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ காமினி லொக்குகே ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடருக்கான வங்கித்தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழுவின் முதலாவது அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் **அச்சிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**5. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) (i) நாகுலுகமுவ, மஹவெல, "ரங்க" எனும் முகவரியில் வதியும் திரு. ஜி.பி.எச். நிஹால் நந்தசிரியினது 2023.10.18 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) ஊருகஸ்மங்ஹந்திய, மென்டோராவல, "ஸ்ரீயானி" எனும் முகவரியில் வதியும் திரு. டப்ளியூ. பியதாசவினது 2023.10.09 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ வஜிர அபேவர்தன சமர்ப்பித்தார்.

(2) வாரியபொல, ஹொரொம்புவ, கலபடவத்த எனும் முகவரியில் வதியும் திரு. ஜே.எம். தயாரத்னவினது 2023.09.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஜயரத்ன ஹேரத் சமர்ப்பித்தார்.

(3) (i) மாத்தறை, ஹித்தெட்டிய மெத, ஹேவகே வத்த, இல. 106ஏ யில் வதியும் திரு. அனுர வீரசிங்கவினது 2023.02.06 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(ii) நாவல, பழைய வீதி, இல. 78/2 இல் வதியும் திருமதி சுமனா ஜயதிலகவினது 2023.10.16 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ புத்திக பத்திரண சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**6. பிரிவிடல் (திருத்தம்):** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம் — 1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பிரிவிடல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்

இச் சட்டமூலம் 2024 பெப்ரவரி 07 ஆம் திகதி புதன்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் நியாயமான, சட்டத்தை மதிக்கும் சமூகமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**7. பாராளுமன்ற அமர்வுகள் ( இல. 1 ):** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.00 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 6.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. பாராளுமன்ற அலுவல்கள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 5 ஆம் இலக்கப் பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. சிறப்புரிமை:** கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன் அனுவதிக்க கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல பின்வருமாறு பிரேரித்தார்,— தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க அவர்கள் 2023 நவம்பர் 07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 118 இன் ஏற்பாடுகளின் கீழ் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. பாராளுமன்ற அமர்வுகள் ( இல. 2 ):** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2024 பெப்ரவரி 06 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம்:** ஒத்திவைக்கப்பட்ட விவாதத்தைத் தொடருவதற்கான கட்டளை மீண்டும் வாசிக்கப்பட்டது (2024 ஜனவரி 23. )

"சட்டமூலம் இப்போது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனும் பிரேரணை மீண்டும் சபைக்கு விடப்பட்டு விவாதம் தொடர்ந்தது.

(பி.ப.12.06 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 12.57 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய தலைமை தாங்குவாராக" என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.01 மணிக்கு கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய தலைமை தாங்கினார்.)

"கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக தலைமை தாங்குவாராக" என மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.25 மணிக்கு கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக தலைமை தாங்கினார்.)

"கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன தலைமை தாங்குவாராக" என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.03 மணிக்கு கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன தலைமை தாங்கினார்.)

"கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார தலைமை தாங்குவாராக" என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.36 மணிக்கு கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார தலைமை தாங்கினார்.)

(பி.ப. 4.59 மணிக்கு சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை மீண்டும் சபைக்கு விடப்பட்டு சார்பாக 108: எதிராக 62 பேரும் வாக்களித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 47(2) (ஆ) இன் பிரகாரம் இலத்திரனியல் வாக்கெடுப்பு முறையினைப் பயன்படுத்தி நூற்றி எழுபது (170) பாராளுமன்ற உறுப்பினர்கள் பின்வருமாறு வாக்களிப்பினை மேற்கொண்டுள்ளனர்:-

| | |
|---|---|
| G 001. Pavithradevi Wanniarachchi | Yes |
| G 002. Nimal Siripala De Silva | Yes |
| G 003. Chamal Rajapaksa | Yes |
| G 004. Mahinda Rajapaksa | Yes |
| G 005. Prasanna Ranatunga | Yes |
| G 006. Susil Premajayantha | Yes |
| G 007. Dinesh Gunawardena | Yes |
| G 009. Douglas Devananda | Yes |
| G 010. Bandula Gunawardana | Yes |
| G 011. Keheliya Rambukwella | Yes |
| G 012. Mahinda Amaraweera | Yes |
| G 013. Wijeyadasa Rajapakshe | Yes |
| G 015. Ramesh Pathirana | Yes |
| G 017. Vidura Wickramanayaka | Yes |
| G 018. Kanchana Wijesekera | Yes |
| G 019. Manusha Nanayakkara | Yes |
| G 020. Tiran Alles | Yes |
| G 021. Ajith Rajapakse | Yes |
| G 022. Nalin Fernando | Yes |
| G 024. Ranjith Siyambalapitiya | Yes |
| G 025. Jagath Pushpakumara | Yes |
| G 026. Dilum Amunugama | Yes |
| G 027. Mohan Priyadarshana De Silva | Yes |
| G 028. Janaka Wakkumbura | Yes |
| G 029. Shehan Semasinghe | Yes |
| G 030. Kanaka Herath | Yes |

| | |
|---|---|
| G 031. Thenuka Vidanagamage | Yes |
| G 032. Pramitha Bandara Tennakoon | Yes |
| G 033. Lasantha Alagiyawanna | Yes |
| G 034. Rohana Dissanayaka | Yes |
| G 037. Vijitha Berugoda | Yes |
| G 038. Lohan Ratwaththe | Yes |
| G 039. Sanath Nishantha | Yes |
| G 040. Tharaka Balasuriya | Yes |
| G 041. Indika Anuruddha Herath | Yes |
| G 042. Siripala Gamalath | Yes |
| G 043. Anuradha Jayaratne | Yes |
| G 044. S. Viyalanderan | Yes |
| G 045. D.V. Chanaka | Yes |
| G 046. Sisira Jayakody | Yes |
| G 047. Piyal Nishantha De Silva | Yes |
| G 048. Prasanna Ranaweera | Yes |
| G 049. D. B. Herath | Yes |
| G 050. Shasheendra Rajapaksa | Yes |
| G 051. Seetha Arambepola | Yes |
| G 052. Shantha Bandara | Yes |
| G 055. A. Aravindh Kumar | Yes |
| G 056. Geetha Samanmale Kumarasinghe | Yes |
| G 057. Suren Raghavan | Yes |
| G 058. Diana Gamage | Yes |
| G 059. Sivanesathurai Santhirakanthan | Yes |
| G 060. Chamara Sampath Dasanayake | Yes |
| G 061. Anupa Pasqual | Yes |
| G 063. S. B. Dissanayake | Yes |
| G 064. Gamini Lokuge | Yes |
| G 065. Vajira Abeywardena | Yes |
| G 066. Janaka Bandara Tennakoon | Yes |
| G 067. C. B. Rathnayake | Yes |
| G 068. S. M. Chandrasena | Yes |
| G 069. Mahindananda Aluthgamage | Yes |
| G 071. Namal Rajapaksa | Yes |
| G 072. Sarath Weerasekara | Yes |
| G 073. Wimalaweera Dissanayaka | Yes |
| G 074. Roshan Ranasinghe | No |
| G 076. Kapila Athukorala | Yes |
| G 077. Gayashan Nawananda | Yes |
| G 079. Jayantha Ketagoda | Yes |
| G 080. Sampath Athukorala | Yes |
| G 082. U. K. Sumith Udukumbura | Yes |

| | |
|---|---|
| G 083. Pradeep Undugoda | Yes |
| G 084. Sanjeeva Edirimanna | Yes |
| G 085. Akila Ellawala | Yes |
| G 086. Jagath Kumara Sumithraarachchi | Yes |
| G 087. Karunadasa Kodithuwakku | Yes |
| G 088. Nalaka Bandara Kottegoda | Yes |
| G 089. Udayakantha Gunathilaka | Yes |
| G 090. Kokila Gunawardene | Yes |
| G 091. Milan Jayathilake | Yes |
| G 092. Kulasingam Dhileeban | Yes |
| G 093. Sudarshana Denipitiya | Yes |
| G 094. Isuru Dodangoda | Yes |
| G 095. Premnath C. Dolawatte | Yes |
| G 096. H. Nandasena | Yes |
| G 097. Muditha Prishanthi | Yes |
| G 098. Sudath Manjula | Yes |
| G 099. Mayadunna Chinthaka Amal | Yes |
| G 100. Nipuna Ranawaka | Yes |
| G 101. Kumarasiri Rathnayaka | Yes |
| G 102. Gunathilaka Rajapaksha | Yes |
| G 103. Upul Mahendra Rajapaksha | Yes |
| G 105. Rajika Wickramasinghe | Yes |
| G 106. M. W. D. Sahan Pradeep Withana | Yes |
| G 107. Madhura Withanage | Yes |
| G 108. D. Weerasingha | Yes |
| G 109. Samanpriya Herath | Yes |
| G 110. Sagara Kariyawasam | Yes |
| G 111. Yadamini Gunawardena | Yes |
| G 112. Manjula Dissanayake | Yes |
| G 113. Ranjith Bandara | Yes |
| G 114. Jayantha Weerasinghe | Yes |
| G 115. Marjan Faleel | Yes |
| G 116. Lalith Varna Kumara | Yes |
| O 001. Rishad Bathiudeen | No |
| O 002. Rajitha Senarathne | No |
| O 003. Imthiaz Bakeer Markar | No |
| O 004. Tissa Attanayake | No |
| O 005. Rauff Hakeem | No |
| O 006. Gayantha Karunatilleka | No |
| O 007. Lakshman Kiriella | No |
| O 008. Sajith Premadasa | No |
| O 009. Kumara Welgama | No |

| | |
|---|---|
| O 010. Patali Champika Ranawaka | No |
| O 012. Mano Ganesan | No |
| O 013. Maithreepala Sirisena | No |
| O 015. G.L. Peiris | No |
| O 016. Anura Dissanayaka | No |
| O 017. A. L. M. Athaullah | Yes |
| O 018. G. G. Ponnambalam | No |
| O 022. Kabir Hashim | No |
| O 024. Abdul Haleem | No |
| O 026. Harsha De Silva | No |
| O 029. Dilip Wedaarachchi | No |
| O 030. Niroshan Perera | No |
| O 031. Eran Wickramaratne | No |
| O 032. J. C. Alawathuwala | No |
| O 033. John Seneviratne | Yes |
| O 036. Dullas Alahapperuma | No |
| O 037. Vijitha Herath | No |
| O 040. Ali Sabri Raheem | Yes |
| O 042. Vadivel Suresh | Yes |
| O 043. Faizal Cassim | No |
| O 046. Ali Zahir Moulana Seyad | No |
| O 047. Ajith Mannapperuma | No |
| O 048. Buddhika Pathirana | No |
| O 049. M. S. Thowfeek | No |
| O 050. Nalin Bandara Jayamaha | No |
| O 051. Hector Appuhamy | No |
| O 052. Thushara Indunil Amarasena | No |
| O 053. Dilan Perera | No |
| O 056. Vasudeva Nanayakkara | No |
| O 057. Harini Amarasuriya | No |
| O 058. Govindan Karunakaram | No |
| O 062. Kavinda Heshan Jayawardhana | No |
| O 064. K. Sujith Sanjaya Perera | No |
| O 065. S. M. Marikkar | No |
| O 066. Imran Maharoof | No |
| O 068. Harshana Rajakaruna | No |
| O 069. Rohini Kumari Wijerathna | No |
| O 072. M. Udayakumar | No |
| O 074. Duminda Dissanayake | Yes |
| O 075. Chandima Weerakkody | No |

| | |
|---|---|
| O 076. Dayasiri Jayasekara | No |
| O 077. Sivagnanam Shritharan | No |
| O 078. M. A. Sumanthiran | No |
| O 079. Charles Nirmalanathan | No |
| O 080. S. Rajaputhiran Rasamanickam | No |
| O 081. W. H. M. Dharmasena | No |
| O 082. Kins Nelson | No |
| O 083. Rohana Bandara | No |
| O 089. Nimal Lanza | Yes |
| O 090. Jayantha Samaraweera | No |
| O 091. B. Y. G. Rathnasekara | No |
| O 092. Sarathie Dushmantha | No |
| O 095. Udayana Kirindigoda | No |
| O 101. S. Jagath Samarawickrama | Yes |
| O 107. Wasantha Yapabandara | No |
| O 110. Weerasumana Weerasinghe | No |
| O 112. Charitha Herath | No |

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 47 (2) (இ) இன் பிரகாரம் செயலாளர் நாயகம் பின்வரும் பெயரை அழைப்பதன் மூலம் பின்வரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் (02) வாக்களிப்பினை மேற்கொண்டனர்:—

| | |
|---|---|
| Field Marshal Sarath Fonseka | No |
| V. Radhakrishnan | No |

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

“சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக” என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது

2 ஆம் வாசகம்

2 ஆம் பக்கத்தில் 2ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“வெளியே இழப்பு, சேதம் அல்லது தீங்கொன்று விளைவிக்கப்”

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3 ஆம் வாசகம்

3 ஆம் பக்கத்தில் 7 முதல் 12 வரையான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“(3) இச்சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும்:—

(அ) நிகழ்நிலைக் கணக்கொன்று என்றவகையாக அல்லது நிகழ்நிலை அமைவிடமொன்றினூடாக தடைசெய்யப்பட்ட கூற்றுக்களின் தொடர்பாடலினால் விளைவிக்கப்படும் சேதம் அல்லது தீங்கிற்கு எதிராக ஆட்களைப் பாதுகாத்தலும்;”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் பக்கத்தில் 13 ஆம் வரியை நீக்கிவிட்டுப் பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“(ஆ) நிகழ்நிலைக் கணக்கொன்று என்றவகையாக அல்லது நிகழ்நிலை அமைவிடமொன்றினூடாக நீதிமன்றத்தை அவமதிக்கும் அல்லது நீதித்துறையின்”;

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2 ஆம் பக்கத்தில் 23 ஆம் வரியை நீக்கிவிட்டுப் பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“(ஈ) நிகழ்நிலைக் கணக்கொன்று என்றவகையாக அல்லது நிகழ்நிலை அமைவிடமொன்றினூடாக இலங்கையில் தடைசெய்யப்பட்ட கூற்றுக்களை”.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலத்தின் ஆங்கிலப் பிரதியின் 1 ஆம் பக்கத்தில் 16 முதல் 18 வரையலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டுப் பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“(a) To protect persons against harm caused by communication of prohibited statements by way of online account or through an online location;

(b) To ensure protection from communication of statement in contempt of court or prejudicial by way of online account or through an online location;”

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

சட்டமூலத்தின் ஆங்கிலப் பிரதியின் 2 ஆம் பக்கத்தில் 1 முதல் 10 வரையலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி மேலும் திருத்தத்தைப் பிரேரித்தார்.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது

5 ஆம் வாசகம்

3 ஆம் பக்கத்தில் 16 முதல் 22 வரையான ( இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

ஆணைக் குழுவின் உறுப்பினர் களின் நியமனம்

5. (1) ஆணைககுழு, தகவல் தொழில்நுட்பவியல் சட்டம் ஆட்சி, சமூகசேவைகள், ஊடகவியல், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அல்லது முகாமை ஆகிய துறைகளின் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் தகைமைகள் மற்றும் அனுபவத்தைக் கொண்ட ஆட்களிடமிருந்தான, அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கு அமைய, சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஆறாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, சனாதிபதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டிய ஐந்து ஆட்களின் பெயர்களை அங்கீகாரத்துக்காக அரசியலமைப்புப் பேரவைக்கு விதந்துரைத்தல் வேண்டும்.

(3) சனாதிபதி, அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்தைப்பெற்றதிலிருந்து பதினான்கு நாட் காலப்பகுதியொன்றினுள், ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக (2) ஆம் உட்பிரிவின் கீழ் அரசியலமைப்பு பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்களை நியமித்தல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவரின் பெயரை அங்கீகரிப்பதற்கு அரசியலமைப்புப் பேரவை மறுக்கின்றவிடத்து, சனாதிபதி புதிய பெயர் நியமனமொன்றைச் செய்தல் வேண்டுமென்பதுடன் (1), (2) மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் அதற்கிணங்க அத்தகைய பெயர் நியமனத்துக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(5) மூன்றாம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு பதினான்கு நாட்காலப்பகுதியினுள் அவசியமான நியமனங்களைச் செய்வதற்கு சனாதிபதி தவறுகின்ற பட்சத்தில், அரசியலமைப்புப் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்கள், அத்தகைய காலப்பகுதி முடிவுறும் தேதியிலிருந்து பயனுறுவதாக ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.".

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலத்தின் சிங்களப் பிரதியின் 3 ஆம் பக்கத்தில் 7 முதல் 12 வரையலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டுப் பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி திருத்தத்தைப் பிரேரித்தார்:-

“(1) ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථා සභාව නම්කරන ලදුව ජනාධිපතිවරයා විසින් පත්කරනු ලබන, තොරතුරු තාක්ෂණය, නීතිය, පාලනය, සමාජ සේවා, පුවත්පත් කලාව, විද්‍යාව සහ තාක්ෂණය හෝ කළමනාකරණය යන ක්ෂේත්‍ර එකක් හෝ ඊට වැඩි සංඛ්‍යාවක් සම්බන්ධයෙන් සුදුසුකම් සහ පළපුරුද්ද සහිත, සාමාජිකයන් පස්දෙනෙකුගෙන් කොමිෂන් සභාව සමන්විත විය යුතුය.

(2) 6 වන වගන්තියේ විධිවිධානවලට යටත්ව, ජනාධිපතිවරයා විසින් පත් කිරීම් සිදුකරනු පිණිස ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාව සභාව විසින් (1) උප වගන්තිය යටතේ කොමිෂන් සභාවේ සාමාජිකයන් ලෙස පත්කරනු පිණිස පුද්ගලයන් පස් දෙනෙකුගේ නම් යෝජනා කළ යුතුය.

(3) ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථා සභාවේ නාම යෝජනා ලැබීමෙන් දින දහ හතරක කාලයක් ඇතුළත ජනාධිපතිවරයා විසින් (2) උප වගන්තිය යටතේ ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථා සභාව විසින් නම්කරන ලද පුද්ගලයන් කොමිෂන් සභාවේ සාමාජිකයන් ලෙස පත්කළ යුතුය.

(4) (3) උප වගන්තිය තුළ දක්වා ඇති දින දහහතරක කාල පරිච්ඡේදය ඇතුළත අවශ්‍ය පත්කිරීම් සිදුකිරීමට ජනාධිපතිවරයා අසමත් වුවහොත්, එම කාල පරිච්ඡේදය ඉක්ම ගිය දින සිට ක්‍රියාත්මකවන පරිදි ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථා සභාව විසින් නම්කරන ලද පුද්ගලයන් කොමිෂන් සභාවේ සාමාජිකයන් ලෙස පත්කරනු ලැබ ඇත්තා සේ සැලකිය යුතුය.''

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7 ஆம் வாசகம்

5 ஆம் பக்கத்தில் 9 முதல் 11 வரையான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(2) ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர், அத்தகைய ஆள்-

(அ) மூன்று மாதங்கள் எனும் காலப்பகுதியொன்றுக்கு மேற்பட்டதாக நீடித்துள்ள உடல் அல்லது உளத் தகுதியீனம் காரணமாக அத்தகைய பதவியின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கு இயலாதவராகவுள்ளார்;

(ஆ) ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி தொடர்ச்சியாக மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்கு அத்தகைய பதவியின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்குத் தவறியுள்ளார்ளூ அல்லது

(இ) ஆறாம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி தகைமையற்றவராகவுள்ளார்,

என இயைபான உறுப்பினரின் கேட்பொன்றை அடுத்துப் பின்னர் அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய சனாதிபதியினால் அவரது பதவியிலிருந்து அகற்றப்படலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான ஏதேனும் கேட்பு, அத்தகைய கேட்பு தொடங்கும் தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் முடிவுறுத்தப்படுதல் வேண்டும்.

(4) அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதன்மேல், சனாதிபதி, ஆணைக்குழுவின் அத்தகைய உறுப்பினரை எழுத்தில் அகற்றுதல் வேண்டுமென்பதுடன் அகற்றுகைக் கடிதத்தில் பின்வருவனவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும்-

(அ) அகற்றுகை எத்தேதியன்று பயனுறுதல் வேண்டுமோ அத்தேதி; அது, அகற்றுகைக் கடிதம் எத்தேதியன்று பெறப்படுகின்றதோ அத்தேதிக்கு முன்னரான ஒரு தேதியாக இருத்தல் ஆகாது; அத்துடன்

(ஆ) அகற்றுக்கைக்கான காரணங்கள்.

(5) ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர் (2) ஆம் உட்பிரிவின்கீழ் கேட்பு தொடங்குவதற்கு முன்னர் அல்லது கேட்பின் போது சானாதிபதியினால் பதவியிலிருந்து இடைநிறுத்தப்படலாம்".

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

8 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது

9 ஆம் வாசகம்

5 ஆம் பக்கத்தில் 16 முதல் 19 வரையான ( இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"அம்முடிபு எந்தக்கூட்டத்தில் எடுக்கப்படுகின்றதோ அந்தக் கூட்டத்துக்கு சமுகமளித்து வாக்களிக்கும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் பெரும்பான்மையினரின் வாக்குகளினால் முடிபு செய்யப்படுதல் வேண்டும். ஏதேனும் கருமத்தின் மீது ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் பெரும்பான்மையினரின் வாக்குகளினால் அவ்வாறு ஆதரவளிக்கப்பட்ட முடிபு".

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது

11 ஆம் வாசகம்

9 ஆம் பக்கத்தில் 10 ஆம் மற்றும் 11 ஆம் வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"(ஆ) இச் சட்டத்தின் கீழ் தவறுகளாக அமைகின்ற தடை செய்யப்பட்ட கூற்றுக்களை அறிவிக்கின்ற ஆட்களுக்கு அத்தகைய":

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9 ஆம் பக்கத்தில் பக்கத்தில் 14 முதல் 17 வரையான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிடுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

9 ஆம் பக்கத்தில் பக்கத்தில் 29 முதல் 31 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

"பாடல்களை அதன் கவனத்துக்காக அரசியலமைப்பின் உறுப்புரை 105 இன் (3) ஆம் பந்தியில் அல்லது வேறு ஏதேனும் இயைபான எழுத்திலான சட்டத்தின்கீழ் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தோதான நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்துதல் மற்றும் அத்தகைய நீதிமன்றத்துக்கு அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்திலிருந்து தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய உதவியை வழங்குதல்;";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10 ஆம் பக்கத்தில் பக்கத்தில் 1 முதல் 3 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10 ஆம் பக்கத்தில் 4 முதல் 7 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "(ஊ) தடைசெய்யப்பட்ட கூற்றுக்களை அகற்றுவதற்கு இணையச் சேவை வழங்குநர்கள் மற்றும் இணைய இடையீட்டாளர்களுக்கு விதப்புரைகளைச் செய்தல்;";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

10 ஆம் பக்கத்தில் 17 முதல் 19 வரையான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "(ஐ) ஆணைக்குழுவின் தத்துவங்கள் மற்றும் பணிகளைப் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய புலனாய்வுகளை நிறைவேற்றுதல்;";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

11 ஆம் 20 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "பெறுதல்;
>
> (ட) ஆணைக்குழுவின் பணியாட்டொகுதி உறுப்பினர்களை நியமித்தல், தொழிலுக்கமர்த்தல் மற்றும் அவர்களை நீக்குதல் அத்துடன் அத்தகைய பணியாட்டொகுதியினர் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல்; அத்துடன்".

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

12 ஆம் வாசகம்

12 ஆம் பக்கத்தில் 12 முதல் 16 வரையிலான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

> "அல்லது ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரணடுக்கும் ஆளாதலும் வேணடும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

> ஓரக் குறிப்பில் "நிகழ்வு பற்றிய பொய்யான கூற்றுக்களின்" என்னும் சொற்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக "பொய்யான கூற்றுக்களின்" என்னும் சொற்களை இடுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

13 ஆம் வாசகம்

12 ஆம் பக்கத்தில் 18 முதல் 27 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை உட்புகுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்:-

| G 092. Kulasingam Dhileeban | No |
| G 093. Sudarshana Denipitiya | No |
| G 094. Isuru Dodangoda | No |

| | |
|---|---|
| O 030. Niroshan Perera | Yes |
| O 031. Eran Wickramaratne | Yes |
| O 032. J. C. Alawathuwala | Yes |
| O 036. Dullas Alahapperuma | Yes |
| O 037. Vijitha Herath | Yes |
| O 046. Ali Zahir Moulana Seyad | Yes |
| O 048. Buddhika Pathirana | Yes |
| O 049. M. S. Thowfeek | Yes |
| O 050. Nalin Bandara Jayamaha | Yes |
| O 051. Hector Appuhamy | Yes |
| O 052. Thushara Indunil Amarasena | Yes |
| O 053. Dilan Perera | Yes |
| O 057. Harini Amarasuriya | Yes |
| O 066. Imran Maharoof | Yes |
| O 072. M. Udayakumar | Yes |
| O 075. Chandima Weerakkody | Yes |
| O 077. Sivagnanam Shritharan | Yes |
| O 078. M. A. Sumanthiran | Yes |
| O 080. S. Rajaputhiran Rasamanickam | Yes |
| O 081. W. H. M. Dharmasena | Yes |
| O 082. Kins Nelson | Yes |
| O 083. Rohana Bandara | Yes |
| O 089. Nimal Lanza | No |
| O 091. B. Y. G. Rathnasekara | Yes |
| O 092. Sarathie Dushmantha | Yes |
| O 095. Udayana Kirindigoda | Yes |
| O 101. S. Jagath Samarawickrama | No |
| O 107. Wasantha Yapabandara | Yes |
| O 110. Weerasumana Weerasinghe | Yes |
| O 111. Gevindu Cumaratunga | Yes |
| O 112. Charitha Herath | Yes |

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 47 (2) (இ) இன் பிரகாரம் செயலாளர் நாயகம் பின்வரும் பெயரை அழைப்பதன் மூலம் பின்வரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவர் (03) வாக்களிப்பினை மேற்கொண்டனர்:—

| | |
|---|---|
| Field Marshal Sarath Fonseka | Yes |
| V. Radhakrishnan | Yes |
| Dayasiri Jayasekara | Yes |

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

37 ஆம் வாசகம்

52 ஆம் பக்கத்தில் 10 முதல் 25 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு (இரண்டுமுட்பட) அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:-

புலனாய்வுகளுக்கு உதவுவதற்காக நிபுணர்களை நியமித்தல்

37. (1) அமைச்சர், நீதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் கலந்தாலோசனையுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புலனாய்வுசெய்வதில் ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கு (இதனகத்துப்பின்னர் "நிபுணர்" ஒருவர் எனக் குறிப்பீடுசெய்யப்படுபவரும்), இலத்திரனியல் பொறியியலில் அல்லது மென்பொருள் தொழினுட்பவியலில் தேவைப்பட்ட தகைமையையும் அனுபவத்தையும் கொண்டவருமான எவரேனும் பகிரங்க அலுவலரை அல்லது ஓர் அரசாங்கத் திணைக்களத்தின், பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் அல்லது ஓர் அரசாங்கக் கம்பெனியின் ஓர் ஊழியரை நியமிக்கலாம்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக —

"நிபுணர்" என்பது,—

(அ) விதித்துரைக்கப்பட்ட தகைமையை உடையவரும் இயைபான பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவருமான ஏதேனும் பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதி உறுப்பினரை உள்ளடக்கும்;

(ஆ) இயைபான பல்கலைக்கழகத்தின் அபிப்பிராயத்தில் விதித்துரைக்கப்பட்ட தகைமையை உடையதும் அத்தகைய பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டதுமான ஏதேனும் பகிரங்க நிறுவனத்தை உள்ளடக்கும்:

ஆயின், மேலே (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியின் நியதிகளின்படி ஒரு "நிபுணரை" அடையாளங் காணமுடியாதவிடத்து, அமைச்சர், இயைபான பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரின் கலந்தாலோசனையுடன் விதித்துரைக்கப்பட்ட தகைமையைத் திருப்திப்படுத்துகின்ற வேறேதேனும் நிறுவனத்தை நியமிக்கலாம்;"

G 043. Anuradha Jayaratne N.G

“அரசாங்கக் கம்பெனி" என்பது, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அரசாங்கம் அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூர் அதிகாரசபை அக்கம்பெனியின் பங்குகளில் ஐம்பது சதவீதத்தை அல்லது அதற்கு மேற்பட்டதை அதில் வைத்திருக்கின்றதுமான ஒரு கம்பெனி என்று பொருளாகும்;

"பல்கலைக்கழகம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் பல்கலைக்கழகம் என்று பொருளாகும்.

(3) (நிபுணத்துவத்தின் குறிப்பிட்ட துறைகளைக் கருத்திற் கொண்டு) (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட அலுவலரொருவரினால் நிறைவேற்றப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டதகைமையையும் அனுபவமும் மற்றும் அத்தகைய அலுவலரின் நியமன முறையும் விதமும் விதித்துரைக்கப்பட்டவாறாதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் கீழான புலனாய்வொன்றின் நோக்கத்துக்காக ஆணைக்குழுவுக்கு உதவுவதற்கு அழைக்கப்பட்ட நிபுணரொருவர் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்-

(அ) உப பரிசோதகர் என்ற பதவி வரிசைக்குக் குறையாத பதவி வரிசையிலுள்ள ஒரு பொலிசு அலுவலருடன் எவையேனும் வளவுகளினுட் பிரவேசிப்பதற்கும்;

(ஆ) ஏதேனும் பணியைப் புரிவதற்கு அல்லது அத்தகைய வேறேதேனும் காரியத்தைச் செய்வதற்கு ஏதேனும் தகவல் முறைமையை, கணினியை அல்லது கணினி முறைமையை அல்லது அத்தகைய கணினியில் வைத்திருக்கப்பட்ட ஏதேனும் நிகழ்ச்சித் திட்டத்தை எவையேனும் தரவுகளை அல்லது தகவல்களை அணுகுவதற்கும்;

(இ) எவையேனும் போக்குவரத்துத் தரவுகளை வெளிக் காட்டும் எவரேனுமாளைத் தேவைப்படுத்துவதற்கும்;

(ஈ) எவரேனுமாளை வாய்மொழிமூலமாக விசாரணை செய்வதற்கும்; அத்துடன்

(உ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக நியாயமான முறையில் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய வேறு காரியங்களைச் செய்வதற்கும்.

(5) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் நிபுணரொருவருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(6) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புலனாய்வு செய்வதில் ஆணைக்குழுவுக்கு அல்லது எவரேனும் பொலிசு அலுவலருக்கு உதவுவதற்கு நிபுணரொருவர் அழைக்கப்படலாம் என்பதுடன் அத்தகைய புலனாய்வின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக் கூடியவாறான அத்தகைய எல்லா உதவிகளையும் அளித்தல் நிபுணரின் கடமையாதலும் வேண்டும். ஒரு புலனாய்வின் கண்டு பிடிப்புக்களின் விளைவாக எவையேனும் வழக்கு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய புலனாய்வின்போது நிபுணரினால் பெற்றுக்கொள்ளக்கூடிய எவையேனும் தகவல்களை, தரவுகளை, விடயத்தை அல்லது வேறு கருமத்தை அத்தகைய வழக்கு நடவடிக்கைகளின் நோக்கங்களுக்காகக் கிடைக்கக்கூடியனவாக்குதல் அவரது கடமையாதல் வேண்டும்.".

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

52 ஆம் பக்கத்தில் 26 முதல் 29 வரையிலான வரிகளை நீக்கிவிடுமாறு பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

53 ஆம் பக்கத்தில் 1 முதல் 28 வரையிலான வரிகளை நீக்கிவிடுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

54 ஆம் பக்கத்தில் 1 முதல் 17 வரையிலான வரிகளை நீக்கிவிடுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தத்தைப் பிரேரித்தார்.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

38 முதல் 41 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

42 ஆம் வாசகம்

56 ஆம் பக்கத்தில் 10 முதல் 16வரையிலான வரிகளை நீக்கிவிட்டு (இரண்டுமுட்பட) அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:-

> “42. (1) இச்சட்டத்தில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்ட வாறு தவிர, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின்கீழான புலனாய்வுகள், வழக்குநடவடிக்கைகளைத் தொடுத்தல், தவறுகள் பற்றிய விளக்கம் மற்றும் அத்தகைய ஏதேனும் விளக்கத்தில் விளம்பப்பட்ட தீர்ப்புக்கள், தண்டனைத் தீர்ப்புகள் மற்றும் கட்டளைகளிலிருந்தான மேன்முறையீடுகளுக்கும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.”.”;
>
> (2) ஆணைக்குழுவானது, இச்சட்டத்தின்கீழ் நடாத்தப்பட்ட புலனாய்வுகளின்போது சேகரிக்கப்பட்ட விடயங்களைக் கவனத்துட் கொண்டதன்மீது, எவரேனுமாள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான தவறொன்றைப் புரிந்துள்ளாரெனத் திருப்திப்படுமிடத்து, அது, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 136 ஆம் பிரிவின் நியதிகளின்படி குற்றவியல் வழக்கு நடவடி வழக்கு நடவடிக்கைகளைத் தொடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்கலாம்.”.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

43 ஆம் மற்றும் 44 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

45 ஆம் வாசகம்

57 ஆம் பக்கத்தில் 12 முதல் 21 வரையிலான வரிகளை நீக்கிவிட்டு (இரண்டுமுட்பட) அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:-

"45. இச்சட்டத்தின் கீழான தவறொன்றுக்கு உடந்தையளிக்கின்ற";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

46 முதல் 52 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

53 ஆம் வாசகம்

63 ஆம் பக்கத்தில் 4 ஆம் வரியை நீக்கிவிட்டு (இரண்டுமுட்பட) அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:-

"இடப்படுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு மறுக்கப்பட்ட ஏதேனும் விதி ஆனால் அதன்கீழ் முன்னர் ஆக்கப்பட்ட எவற்றுக்கும் பங்கமின்றி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறும் வகையில் இல்லாதொழிக்கப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும்.";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

54 மற்றும் 55 ஆம் வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

56 ஆம் வாசகம்

64 ஆம் பக்கத்தில் 1ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:-

"56. (1) இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

64 ஆம் பக்கத்தில் 29 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தமொன்றைப் பிரேரித்தார்:-

"அதற்குத் மேற்பட்ட இறுதிப் பயன்களுக்குப் பொய்யான";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

65 ஆம் பக்கத்தில் 16 முதல் 27 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தமொன்றைப் பிரேரித்தார்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

66 ஆம் பக்கத்தில் 1 முதல் 5 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தமொன்றைப் பிரேரித்தார்:-

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

66 ஆம் பக்கத்தில் 24 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தமொன்றைப் பிரேரித்தார்:-

"இணைய அணுக்கச் சேவை வழங்குநர்" என்பது, 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, தொலைத்தொடர்புகள் சட்டத்தின்கீழ் தொலைத்தொடர்புச் சேவைகளை வழங்குவோருட்பட, அனுப்பப்";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

67 ஆம் பக்கத்தில் 22 ஆம் வரியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவனவற்றை இடுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தமொன்றைப் பிரேரித்தார்:-

"அவ்விறுதிப் பயனரை இணைக்கும்; அல்லது

(ஈ) இணைய அடிப்படையிலான சேவை வழிகளினூடாக, நிகழ்நிலை அமைவிடங்களின் சொந்தக்காரர்களுக்கு அலல்து தொழிற்படுத்துநர்களுக்கு மற்றும் விளம்பரப்படுத்துநர்களுக்கும் இணையச் சேவை வழங்குநர்களுக்கும் இடையேயான இணைப்பாக அல்லது இணைப்பின் பாகமாகச் செயலாற்றுவதன்மூலம் ஏதேனும் இடத்தில் கட்டணம் செலுத்தப்பட்ட உள்ளீட்டை அறிவிப்பதனை வசதிப்படுத்துகின்ற ஒரு சேவை எனப் பொருள்படும்,";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

68 ஆம் பக்கத்தில் 29 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவனவற்றை இடுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தமொன்றைப் பிரேரித்தார்:-

"வெளியிடுதல்" என்பது, இணைத்தின்மீது அல்லது இணையத்தினூடாக பொதுமக்களுக்குக் கிடைக்கக்கூடிய தாக்குதல் எனப் பொருள்படும்,";

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

68 ஆம் பக்கத்தில் 30 முதல் 33 வரையிலான வரிகளை (இரண்டுமுட்பட) நீக்கிவிடுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தமொன்றைப் பிரேரித்தார்:-

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

69 ஆம் பக்கத்தில் 25 ஆம் வரியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தமொன்றைப் பிரேரித்தார்:-

"(2) இச்சட்டத்தில் பயன்படுத்தப்பட்டதும் தண்டனைச் சட்டக் கோவையில் வரைவிலக்கணங்கூறப்பட்டதும் ஆனால், இச்சட்டத்தில் வரைவிலக்கணங்கூறப்படாததுமான ஏதேனும் சொல் அல்லது சொல்லமைப்பு, தண்டனைச் சட்டக்கோவையில் அத்தகைய சொல்லுக்கு அல்லது சொல்லமைப்புக்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

"வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

57 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

புதிய அட்டவணைகள்

69 ஆம் பக்கத்தில் 28 ஆம் வரியை உடனடுத்துப் பின்வரும் புதிய அட்டவணையை இடுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தமொன்றைப் பிரேரித்தார்:-

"அட்டவணை

(பிரிவு 23. (1))

| **தண்டனைச் சட்டக் கோவையின் பிரிவு** | **தண்டனைச் சட்டக் கோவையின் கீழான தவறு** | **தண்டனை** |
|---|---|---|
| 286அ | சிறுவர்கள் தொடர்பிலான ஆபாசமான வெளியீடு முதலியன | இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் பத்து ஆண்டுகளுக்கு மேற்படாததுமான காலமொன்றிற்கு இரு வகையிலொருவகை மறியற்றண்டனை அத்துடன் குற்றப்பணத்தினாலும் தண்டிக்கப்படலாம் |
| 288 | சிறுபிள்ளையை யாசகம் செய்வித்தல் அல்லது கூட்டுவித்தல் | ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை அத்துடன் குற்றப்பணம் ஒன்றுக்கும்ஆளாகலாம் |
| 288அ | பாலியல் உடலுறவுக்குக் கூட்டிவிடுபவர்களாகச் செயலாற்றுவதற்கு சிறு பிள்ளைகளை வாடகைக்கு விடுதல் அல்லது தொழிலுக்கமர்த்துதல் | இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் ஐந்தாண்டுகளை விஞ்சாததுமானதொரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை அத்துடன் குற்றப்பணமொன்றுக்கும் ஆளாகலாம் |
| 288ஆ | மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களில் வியாபாரம் செய்வதற்கு சிறு பிள்ளைகளை வாடகைக்கு விடுதல் அல்லது தொழிலுக்கமர்த்துதல் | ஐந்தாண்டுகளுக்குக் குறையாததும் ஏழு ஆண்டுகளை விஞ்சாததுமானதொரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை அத்துடன் குற்றப்பணமொன்றுக்கும் ஆளாகலாம் |
| 308அ | பிள்ளைகளைக் கொடுமைப்படுத்தல் | இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் பத்தாண்டுகளுக்கு மேற்படாததுமானதொரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை அத்துடன் குற்றப்பணத்தினால் தண்டிக்கப்படலாம் என்பதுடன் எந்த ஆள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட நட்டஈட்டுத் தொகையொன்றை அத்தகைய ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்காக செலுத்துவதற்கு கட்டளையிடப்படலாம் |

| | | |
|---|---|---|
| 360அ | கூட்டிவிடுதல் | இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் பத்தாண்டுகளுக்கு மேற்படாததுமானதொரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை அத்துடன் குற்றப்பணத்தினாலும் தண்டிக்கப்படலாம் |
| 360ஆ | சிறுபிள்ளை விபச்சாரம் | ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமானதொரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை அத்துடன் குற்றப்பணத்தினாலும் தண்டிக்கப்படலாம் |
| 360இ | விலைப்படுத்துதல் | மூன்று ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமானதொரு காலத்திற்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை அத்துடன் குற்றப்பணத்தினாலும் தண்டிக்கப்படலாம் |
| 363 | கற்பழிப்பு | ஏழு ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமானதொரு காலத்திற்கு கடூழிய மறியற்றண்டனையும் குற்றப்பணமும், மேலும் எந்த ஆள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட நட்டஈட்டுத் தொகையொன்றை அத்தகைய ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்காக செலுத்துவதற்கு கட்டளையிடப்படுதல் வேண்டும் அத்துடன் நட்டஈடு செலுத்தத் தவறும் விடயத்தில் இரண்டு ஆண்டுகள் வரையிலான மேலதிக மறியற்றண்டனைக் காலமும் |
| | கற்பழிப்பு<br>(அ) பகிரங்க அலுவலர் ஒருவர் அவரது கட்டுக்காப்பில் உள்ள பெண் மீது புரிதல்<br>(ஆ) ஆளொருவர் ஒரு விளக்கமறியல் வீட்டில், பெண்கள் அல்லது சிறு பிள்ளைகள் நிறுவனம் முதலியவற்றின் முகாமையில் அல்லது பணியாட்டொகுதியில் இருந்து கொண்டு அங்கு உள்ளுறையும் பெண்கள்மீது புரிதல்<br>(இ) ஒரு வைத்தியசாலையின் முகாமை அல்லது பணியாட்டொகுதியிலுள்ள ஆளொருவர் அந்த வைத்தியசாலையில் உள்ள ஒரு பெண்மீது புரிதல் | பத்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமானதொரு காலத்திற்கு கடூழிய மறியற்றண்டனையும் குற்றப்பணமும், மேலும் எந்த ஆள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட நட்டஈட்டுத் தொகையொன்றை அத்தகைய ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்காக செலுத்துவதற்கு கட்டளையிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்துடன் நட்டஈடு செலுத்தத் தவறும் விடயத்தில் இரண்டு ஆண்டுகள் வரையிலான மேலதிக மறியற்றண்டனைக் காலமும் |

| | | |
|---|---|---|
| | (ஈ) கர்ப்பிணிப் பெண் மீது புரிதல்<br>(உ) பதினெட்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட பெண்மீது புரிதல்<br>(ஊ) உள அல்லது உடல் இயலாமைக்குட்பட்ட பெண்மீது புரிதல்<br>(எ) ஆட்கள் கூட்டத்தினரால் புரிதல் | |
| | பதினாறு வயதுக்குக் கீழ்ப்பட்ட பெண்மீது அத்தகைய பெண் அவ்வாள் தொடர்பாக 364அ என்னும் பிரிவில் எடுத்துக்கூறப்பட்ட ஏதேனும் உறவு முறையில் இருக்கின்றவிடத்து | பதினைந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமான கடுழிய மறியற்றண்டனையும் குற்றப்பணமும் |
| 364 அ | முறையில்லாப் புணர்ச்சி | ஏழு ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமானதொரு காலத்திற்கு கடுழிய மறியற்றண்டனையும் குற்றப்பணமும் |
| 365 | இயற்கைக்கு விரோதமான தவறு | பத்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமானதொரு காலத்திற்கு கடுழிய மறியற்றண்டனையும் குற்றப்பணமும், மேலும் எந்த ஆள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட நட்டஈட்டுத் தொகையொன்றை அத்தகைய ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்காக செலுத்துவதற்கும் கட்டளையிடப்படுதல் வேண்டும் |
| 365அ | ஆட்களுக்கிடையில் மிக்க இழிவான செயல்கள் | பத்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமானதொரு காலத்திற்கு கடுழிய மறியற்றண்டனையும் குற்றப்பணமும், மேலும் எந்த ஆள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட நட்டஈட்டுத் தொகையொன்றை அத்தகைய ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்காக செலுத்துவதற்கு கட்டளையிடப்படுதல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| 365ஆ | பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் | ஏழு ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு மேற்படாததுமானதொரு காலத்திற்கு கடுழிய மறியற்றண்டனையும் குற்றப்பணமும், மேலும் எந்த ஆள் தொடர்பில் தவறு புரியப்பட்டதோ அந்த ஆளுக்கு நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட நட்டஈட்டுத் தொகையொன்றை அத்தகைய ஆளுக்கு விளைவிக்கப்பட்ட ஊறுகளுக்காக செலுத்துவதற்கும் |

"அட்டவணை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"அட்டவணை சட்டமூலத்தில் சேர்க்கப்பட வேண்டும்" என்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பொதுவான திருத்தங்கள்

இச்சட்டமூலம் பின்வருமாறு திருத்தப்பட வேண்டுமென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் திருத்தமொன்றைப் பிரேரித்தார்:-

(அ) "இணைய அணுக்கச் சேவை வழங்குநர்" என்னும் சொற்கள் சட்டமூலத்தில் காணப்படும் இடங்களில் எல்லாம் அவற்றுக்குப் பதிலாக "இணைச் சேவை வழங்குநர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) "சேவை வழங்குநர்" என்னும் சொற்கள் சட்டமூலத்தில் காணப்படும் இடங்களில் எல்லாம் அவற்றுக்குப் பதிலாக "இணையச் சேவை வழங்குநர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) "எண்ணிம விளம்பரப்படுத்தல் இடையீட்டாளர்" என்னும் சொற்கள் சட்டமூலத்தில் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றிற்குப் பதிலாக "இணைய இடையீட்டாளர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஈ) "ஒருவாரம்" என்னும் சொற்கள் சட்டமூலத்தில் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக "இரண்டு வாரங்கள்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

"திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக" எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"பொதுவான திருத்தங்கள் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு" மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

விரிவுப் பெயர்

விரிவுப் பெயரில் பின்வரும் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் மேலுமொரு திருத்தமொன்றைப் பிரேரித்தார்:-

(1) "இலங்கையில் நிகழ்வு பற்றிய குறித்த சில கூற்றுக்களின் நிகழ்நிலைத் தொடர்பாடலை தடைசெய்வதற்கு ஏற்பாடு செய்வதற்கு;" என்னும் சொற்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக "நிகழ்நிலை மூலமாகச் செய்யப்பட்ட தடைசெய்யப்பட்ட கூற்றுக்களுக்கெதிரான காப்பை வழங்குவதற்கும்;" என்னும் சொற்களை இடுக; அத்துடன்

(2) “நிகழ்வு பற்றிய பொய்யான கூற்றுக்களின்” என்னும் சொற்களை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாக “தடைசெய்யப்பட்ட கூற்றுக்களின்” என்னும் சொற்களை இடுக.

“திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக” எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“விரிவுப் பெயர் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டு” மென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

“சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்குவிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமைய சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

**12. இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்:** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்ருமாறு பிரேரித்தார்,— 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 யூன் 01 ஆம் திகதிய 2334/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.12.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்குவிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**13. விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை:** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்ருமாறு பிரேரித்தார்,— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 நவம்பர் 01 ஆம் திகதிய 2356/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்குவிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**14. வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் கட்டளை:** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்ருமாறு பிரேரித்தார்,— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 டிசம்பர் 20 ஆம் திகதிய 2363/26 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.01.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்குவிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**15. மாத்தறை மாவட்டத்தில் நில்வளா கங்கையை உள்ளிட்ட நீர் மூலங்களின் காரணமாக எழுந்துள்ள பிரச்சினைகளை ஆழமாக ஆராய்ந்து புதிய புனர்நிர்மாண முன்மொழிவுத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்குப் பொருத்தமான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழு:** கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அனுவதிக்க கௌரவ புத்திக பத்திறண பின்ருமாறு பிரேரித்தார்,— மாத்தறை மாவட்டத்தின் கொங்கல மற்றும் இரக்வானை மலைத்தொடரைச் சார்ந்ததாக ஊற்றெடுக்கும் நில்வளா கங்கை மற்றும் கிங் கங்கை ஆகியன முறையே மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களூடாகப் பாய்ந்து கடலுடன் சங்கமிக்கின்ற அதேவேளை பொல்வத்த கங்கையும் இதற்கிணையான முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நீர் மூலம் என்பதாலும்;

இக் கங்கைகளின் நீர் முகாமைத்துவம் மற்றும் வெள்ள முகாமைத்துவம் தொடர்பில் முதன் முதலில் ஒல்லாந்தர் ஆட்சியின்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் சுதந்திர இலங்கையில் கிங் மற்றும் நில்வளா ஆகிய கங்கைகளின் நீரை தென்கிழக்கிலங்கை எனப்படும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தைப் போஷிப்பதற்காக பயன்படுத்துவது பற்றிய ஆரம்பப் பிரேரணையை அப்போது அக்குரெஸ்ஸ தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த டாக்டர் எஸ்.ஏ. விக்கிரமசிங்ஹ அவர்கள் 1950களில் சமர்ப்பித்திருப்பதாலும்;

கிங் மற்றும் நில்வளா ஆகிய கங்கைகளின் நீரை முகாமை செய்தவாறு வருடாந்தம் ஏற்படுகின்ற வெள்ள நிலைமையை முகாமைத்துவம் செய்து அந்த நீரை இரு மாவட்டங்களிலுமுள்ள மக்களது தேவைகளுக்கும், விவசாயம் மற்றும் கைத்தொழிற்சாலை

செயற்பாடுகளுக்கும், உயிரினப் பல்வகைமை மற்றும் சுற்றுச் சூழல் சமநிலையை பேணிச் செல்வதற்கும் முறையாகப் பயன்படுத்துவது தொடர்பில் பல்வேறு துறைசார் நிபுணர்களினால் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாலும்;

1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நில்வளா கங்கையை அண்டியதாக வெள்ளப்பெருக்கைத் தடுப்பதற்கான கருத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்ட போதிலும், 1987 – 1989 காலப்பகுதியில் நாட்டில் காணப்பட்ட அசாதாரண நிலைமை காரணமாக அத் திட்டம் இடைநடுவே நிறுத்தப்பட்டதால் நில்வளா கங்கையை அண்டியதான விளைநிலங்கள் தரிசு நிலங்களாக மாறியதோடு, வெள்ளப்பெருக்கு அச்சுறுத்தல் தொடர்ந்தும் காணப்படுவதால் வறட்சிக் காலத்தில் உவர் நீர் நில்வளா கங்கையின் ஊடாக மேல் நோக்கிப் பாய்ந்தோடி குடி நீரிலும் விளைநிலங்களிலும் கலந்தமையினால் பாரதூரமான பிரச்சினைகள் ஏற்பட்டன. அத்துடன் இதன் பொருட்டு செயற்படுத்தப்பட்ட நில்வளா உவர் நீர் தடுப்பணை காரணமாக இன்றளவில் வெள்ள நீர் தொடர்ந்தும் விளைநிலங்களில் தேங்குவதால் நெல், கறுவா, மரக்கறி, தெங்கு மற்றும் இதர பயிர்ச் செய்கை நடவடிக்கைகளும் பாற் பண்ணையாளர்களும் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்ற மோசமானதொரு நிலைமை ஏற்பட்டுள்ளதாலும்,

கிங் கங்கையை அண்டியதான உவர் நீர் தடுப்பணை வெற்றியளித்ததோடு, நில்வளா கங்கையை அண்டியதான உவர் நீர் தடுப்பணை பலனளிக்காமை தொடர்பாக ஆழமாக பகுப்பாய்வு செய்ய வேண்டிய நிலைமை தோன்றியுள்ளதாலும்,

(அ) சுதந்திர இலங்கையின் சுமார் 7 1/2 தசாப்த காலப்பகுதியில் கிங் கங்கை மற்றும் நில்வளா கங்கை தொடர்பாக அறிஞர்களும் துறைசார் நிபுணர்களும் மேற்கொண்ட ஆய்வுகள் குறித்து ஆழமாக பகுப்பாய்வு செய்து அவர்களது முன்மொழிவுகளிலுள்ள காத்திரமான இயல்புகளை இனங்காண்பதற்கும்;

(ஆ) நில்வளா மற்றும் கிங் ஆகிய கங்கைகளின் மேல் படுகையின் மேலதிக நீரை தென்கிழக்கிலங்கைக்குக் கொண்டு செல்வது தொடர்பில் விஞ்ஞானபூர்வமானதும் மக்கள் வாழ்வுக்கு குறைந்தபட்ச பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலானதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முறையியல்கள் தொடர்பாக நடைமுறைச் சாத்தியமான வேலைத்திட்டமொன்றை உருவாக்குவது பற்றிய முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கும்;

(இ) மேற்படி (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டத்தை இதற்கு முன்னர் செயற்படுத்தியமையுடன் தொடர்புடையதாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்/ செலவிடப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதிகளின் உற்பத்தித்திறன் தொடர்பாக ஆழமான விசாரணையினை மேற்கொள்வதற்கும்;

(ஈ) நில்வளா உவர் நீர் தடுப்பணை காரணமாக ஏற்பட்டுள்ள அனைத்து விதமான பாதிப்புகளையும் நீக்குவதற்கு மேற்கொள்ளக்கூடிய துரித குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட கால திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்துவதற்கான விதப்புரைகளை வழங்குவதற்கும்;

(உ) மாவட்டத்திலுள்ள நீர்ப் பாவனையாளர்களையும் எதிர்காலத்தில் விரிவுபடுத்தக்கூடிய நீர் கருத்திட்டங்களுக்காக திகிலி ஓயாவை உள்ளிட்ட பிரதேசங்களில் பொருத்தமான புதிய நீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதையும் அடையாளங் காண்பதற்கும், தற்போது செயற்பாட்டிலுள்ள நீர்ப் பம்பி நிலையங்கள் தொடர்பில் விஞ்ஞான அடிப்படையிலான பகுப்பாய்வினை மேற்கொண்டு புதிய மூலோபாயங்களை முன்மொழிவதற்கும்;

(ஊ) நில்வளா கங்கையை அண்டியதாக இடம்பெற்றுவரும் முதலை – மனித மோதல் தொடர்பில் நிலைபேறான தீர்வினை வழங்குவதற்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கும்;

(எ) தென் மாகாணத்தில் கைத்தொழில், கமத்தொழில், நீர் மின்னுற்பத்தி, கால்நடை வளர்ப்பு மற்றும் ஏனைய மனித செயற்பாடுகள் மற்றும் உயிரினப் பல்வகைமையைப் பாதுகாத்தவாறு நில்வளா மற்றும் கிங் கங்கைகளின் நீர் கடலுடன் சங்கமிக்க முன் உச்சப் பயனுடன் அதனைப் பயன்படுத்துவது தொடர்பில் முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கும்;

(ஏ) வெள்ளத் தடுப்பு அபிவிருத்திக் கருத்திட்டமொன்றிற்கு அப்பால் சென்று கிங் – நில்வளா துரித பல்நோக்குத் திட்டத்தினூடாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கும் குறித்த நீர் மூலங்களை போக்குவரத்து, நன்னீர் மீன்பிடிக் கைத்தொழில், சுற்றுலாத்துறை மற்றும் கலாசார விழிப்புணர்வுக்காக பயன்படுத்துவதற்கான புதிய ஆக்கபூர்வமான அணுகுமுறைகளை அடையாளங் காண்பது தொடர்பான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கும்;

(ஐ) கிங், நில்வளா மற்றும் பொல்வத்த கங்கைகளைச் சார்ந்ததாக அக்கங்கைகளுடன் இணையும் கிளை ஆறுகள் / ஓடைகள் மற்றும் அவ்வாறான நீர்நிலைகளை அண்டியதாகவும், ஆற்றுப்படுகைகளிலும் பள்ளத்தாக்குகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திச் செயற்பாடுகளை இனங்காணல், அக்கங்கைகளின் இருபுறமும் ஒதுக்குக் காடுகளை உருவாக்கல், கழிவுகள் ஒன்றுசேர்வதை தடுத்தல், மனித செயற்பாடுகள் மூலம் கங்கைகளின் நீரை மாசுறச் செய்யும் வழிமுறைகளை மறுதலித்தல், அனுமதியற்ற கட்டட நிர்மாணங்கள் மூலம் நீராதாரங்களுக்கு தடையேற்படுதல் மற்றும் சில மின்னுற்பத்தி நிலையங்களினால் கங்கைகளுக்கும், உயிரினப் பல்வகைமைக்கும் ஏற்படும் பாதிப்புகளை இனங்கண்டு அந்த நிலைமைகளை மறுதலிப்பதற்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கும்;

(ஒ) மேற்குறிப்பிட்ட கங்கைகளுடன் தொடர்புடையதாக இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முழுமை பெறாத பணிகளை இனங்கண்டு, அப்பணிகளை மேற்கொள்வதற்குரிய முன்மொழிவுகளைத் தயாரித்தல், இக்கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தொடர்பாக தடயவியல் கணக்காய்வு உட்பட பொருத்தமான நடவடிக்கைகளை தேவையான சந்தர்ப்பங்களில் முன்மொழிவதற்கும்; மற்றும்

(ஓ) மேலே (ஐ)இல் குறிப்பிடப்பட்டுள்ள கங்கைகளுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள், இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் வெற்றியளிக்காத நடவடிக்கைகள் தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து, குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றுகின்றது.

2. (அ) குழுவின் தவிசாளரும் அதன் உறுப்பினர்களும் சபாநாயகரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், குழுவானது இருபது (2 0) உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது —

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) மேற்படி விடயங்கள் தொடர்பில் விரிவான ஆய்வினை மேற்கொள்வதற்காக குழு அவசியமென தீர்மானிக்கும் வகையில், குழுவின் முன் தோன்றுமாறு எவரேனும் ஆளை அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை சமர்ப்பிக்குமாறு பணிப்பு விடுப்பதற்கும், அத்தகைய அனைத்து சாட்சிகளையும் எழுத்து மூலமாகவோ, வாய்மூலமாகவோ பெற்றுக்கொள்வதற்கும்;

(இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஈ) பாராளுமன்றத்தின் ஏதும் ஒத்திவைப்பினால் அல்லது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைப்பினால் தடைபெறாது காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும், கூடுவதற்கும்;

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழுவானது அதனது முதல் கூட்டத்திலிருந்து மூன்று (03) மாத காலத்தினுள் அல்லது பாராளுமன்றத்தால் வழங்கப்படும் அத்தகைய மேலதிக ஒரு காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்திற்கு அதன் அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

பிரேரணை சபைக்குவிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**16. ஒத்திவைப்பு:** " இப்பராளுமன்றம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்ற சபை முதல்வர் பிரேரித்தார்.

சபாநாயகர் சபையின் அனுமதியுடன் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:— "பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் படைக்கலச் சேவிதர் திரு. நரேந்திர பர்னாந்து அவர்களால் வழங்கப்பட்ட கடிதம் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் தற்பொழுது வாசிக்கப்படுமாக",—

பாராளுமன்ற செயலாளர் நாயகம் அக்கடிதத்தை வாசித்தார்:—

"ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුව,
ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ.
2024 ජනවාරි මස 04 වැනි දින

පාර්ලිමේන්තුවේ මහ ලේකම්තුමිය වෙත,
මහ ලේකම්තුමියනි,

ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුවේ වේත්‍රධාරී ධුරයෙන් විශ්‍රාම යාම

2018 සැප්තැම්බර් මස 01 වන දින ශ්‍රී ලංකා පාර්ලිමේන්තුවේ හයවැනි වේත්‍රධාරී ලෙස පත්වූ මා එම ධුරයෙන් 2024 ජනවාරි මස 30 වැනි දින සිට ක්‍රියාත්මක වන පරිදි විශ්‍රාම යාමට නියමිත බව ඔබතුමිය වෙත ගෞරවයෙන් දන්වා සිටිමි.

1981 වසරේ අග භාගයේ පාර්ලිමේන්තුවේ පරිපාලන දෙපාර්තමේන්තුවේ සේවයට බැඳුණු මා සහකාර අධ්‍යක්ෂ (පරිපාලන) ධුරය දක්වා උසස්වීම් ලැබ, 2000 වසර අග භාගය දක්වා එම දෙපාර්තමේන්තුවේ වසර 19ක් සේවය කිරීමෙන් පසු, 2001.01.01 දින සිට සහකාර වේත්‍රධාරී ධුරයට පත්වී එම ධුරයේ වසර 06ක් ද, ඉන්පසු නියෝජ්‍ය වේත්‍රධාරී ධුරයේ වසර 12ක් ද, වේත්‍රධාරී ධුරයේ වසර පහමාරක් ද වශයෙන් වසර 23කට වැඩි කාලයක් ව්‍යවස්ථාදායකය වෙත සේවය කිරීමට ලැබීම මා ලද වරප්‍රසාදයක් මෙන්ම භාග්‍යයක් ලෙස ද සලකමි.

දශක 4කට වැඩි කාලයක් (වසර 42ක්) සේවය කර ඇති මා, දැනට පාර්ලිමේන්තුවේ සිටින ජ්‍යොෂ්ඨතම නිලධාරියා මෙන්ම පැරණි හා නව පාර්ලිමේන්තුවල සේවය කිරීමේ භාග්‍යය ලත් නිලධාරියකු වීම සිහිපත් කරන්නේ නිහතමානී ආඩම්බරයකිනි.

වේත්‍රධාරී ධුරයේ රාජකාරි ඉටු කිරීමේදී ගරු කථානායකතුමා, ගරු අග්‍රාමාත්‍යතුමා ඇතුළු කැබිනට් අමාත්‍යවරුන් සහ ගරු සභාවේ පක්ෂ සහ විපක්ෂ ගරු මන්ත්‍රීවරුන් විසින් මා වෙත ලබා දුන් සහයෝගය, සුහදශීලීත්වය හා කාරුණිකභාවය පිළිබඳව මාගේ හදපිරි ගෞරවය හා ප්‍රණාමය පිරිනැමීම සඳහා මෙය අවස්ථාව කර ගැනීමට කැමැත්තෙමි.

තවද, මෙම ගරු සභාව නියෝජනය කළ හිටපු සියලුම ගරු අග්‍රාමාත්‍යවරුන්, ගරු කථානායකවරුන්, පක්ෂ විපක්ෂ පාර්ලිමේන්තු මන්ත්‍රීවරුන් වෙත ද මාගේ කෘතඥතාව පිරිනැමීමට කැමැත්තෙමි. මීට අමතරව, හිටපු ගරු ජනාධිපතිවරුන් සහ වර්තමාන ගරු ජනාධිපතිතුමා වෙත ද මාගේ ගෞරවය සහ ප්‍රණාමය පුද කර සිටිමි.

අවසාන වශයෙන් පාර්ලිමේන්තුවේ වර්තමාන මහ ලේකම්තුමිය ඇතුළු සමස්ත පාර්ලිමේන්තු කාර්ය මණ්ඩලය, අනුබද්ධිත හා අනෙකුත් කාර්ය මණ්ඩලය සහ සියලුම හිටපු පාර්ලිමේන්තු මහ ලේකම්වරුන් ඇතුළුව හිටපු කාර්ය මණ්ඩල සාමාජික සාමාජිකාවන් වෙත ද මාගේ හෘදයාංගම ස්තූතිය පළ කිරීමට කැමැත්තෙමි.

මෙම උත්තරීතර ආයතනය වෙත දශක 4කට වැඩි කාලයක් වගකීමෙන් යුතු සේවයක් ඉටු කිරීමටත්, පාර්ලිමේන්තු ක්‍රමවේදයේ වැදගත් තනතුරක් වන වේත්‍රධාරී ධුරය හෙබැවීමටත් මා හට අවස්ථාව ලැබීම, මා ලද වරප්‍රසාදයක් මෙන්ම ගෞරවයක් ලෙසත් සලකමි.

මවිසින්, වේත්‍රධාරී ධුරය හෙබැවූ කාලවකවානුව තුළ ඉතා සංකීර්ණ හා සංවේදී කාලවකවානුවක් වූ අතර, එහිදී මුහුණ දුන් අභියෝගයන් හා සංවේදී සිදුවීම් ඉදිරියේ නොබියව, ඍජුව කටයුතු කරමින් එම තත්ත්වයන් සමනය කර ගැනීමට කටයුතු කළ ආකාරය පිළිබඳ මතකය සදා ස්මරණීය බවද ඔබතුමිය වෙත ප්‍රකාශ කරනු කැමැත්තෙමි.

**මෙයට විශ්වාසී,**
**නරේන්ද්‍ර ප්‍රනාන්දු**
**වේත්‍රධාරී"**

**17. சேவை நலன் பாராட்டுதல் பிரேரணை - படைக்கலச் சேவிதர் :** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— 1981 ஆம் பாராளுமன்ற நிர்வாகத் திணைக்களத்தில் சேவையில் இணைந்து உதவிப் பணிப்பாளர் வரை பதவியுயர்வு பெற்று, பின்னர் இப் பாராளுமன்றத்தின் உதவிப் படைக் கலச் சேவிதராக 6 வருடங்களும், பிரதிப் படைக்கலச் சேவிதராக 12 வருடங்களும் படைக்கலச் சேவிதராக ஐந்தரை வருடங்களுமாக இவ்வுயரிய பாராளுமன்றத்தில் 42 ஆண்டுகள் சேவையாற்றி 2024 சனவரி 30 ஆம் திகதி ஓய்வுபெறும் திரு. நரேந்திர பர்னாந்து அவர்களுக்கு இச்சபை அதன் பாராட்டுதலைத் தெரிவிப்பதோடு, அவரின் சேவையிலிருந்து இளைப்பாறுதல் மீது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றது.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அப்பொழுது, பி.ப. 6.00 மணிக்கு மேலாகிவிடவே, பி.ப. 7.41 மணிக்கு சபாநாயகர் இன்றைய தின சபைத்தீர்மானத்திற்கிணங்க பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம் 2024 பெப்ரவரி 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.